## இந்தியாவில் இரண்டாவது இடம்!

# பெண் தொழில் முனைவோரை உருவாக்குவதில் தமிழ்நாடு சாதனை!

### அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அறிக்கை!

**சென்னை, டிச.4-**

**'திராவிட மாடல்' அரசு பொறுப்பேற்ற மூன்றாண்டுகளில் 6,22,373 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு பெண் தொழில் முனைவோரை உருவாக்குவதில் தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது இடம் பெற்றுள்ளது என்று மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் தெரிவித்துள்ளார்.**

**இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

பெண்களைச் சமூக பொருளாதாரச் சுதந்திர முடையவர்களாக உயர்த்துவது சமூகநீதி அரசியலின் மிக அடிப்படையான நோக்கமாகும். அதனடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பெண்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கான பல்வேறு திட்டங்களைத் நமது 'திராவிட மாடல்' அரசு செயல்படுத்தி வருகிறது.

சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களைப் (MSME) பதிவு செய்வதற்கான "உத்யம்" தளத்தில் பதிவு



செய்தவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, 2021-22ஆம் ஆண்டில் 1,27,316 பேரும் 2022-23 ஆம் ஆண்டில் 2,01,715 பேரும் 2023-24ஆம் ஆண்டில் 2,93,342 பேரும் பதிவு செய்துள்ளனர். இதன் மூலம் மொத்தமாக கடந்த மூன்றாண்டுகளில் 6,22,373 பெண் தொழில் முனைவோர்களின் நிறுவனங்களைப் பதிவு செய்து இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்று தமிழ்நாடு சாதனைப் படைத்துள்ளது.

**மகளிர் விடியல் பயணம்!**

'மகளிர் விடியல் பயணம்' 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை', 'புதுமைப் பெண்' போன்ற மகளிருக்கான திட்டங்களின் வழியில் பெண் தொழில் முனைவோருக்கான சிறப்பு நடவடிக்கைகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான 'திராவிட மாடல்' அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள்; புத்தொழிலை (Startup) ஊக்குவிப்பதற்கான மானியத்துடன் கூடிய 'TANSEED' திட்டத்தின் கீழ் பெண் தொழில் முனைவோருக்குச் சிறப்புத் தொகுப்புகள் போன்ற பெண் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்கான தமிழ்நாடு அரசின் தொலைநோக்கு நடவடிக்கைகளால் இச்சாதனை சாத்தியப்பட்டிருக்கிறது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் மகளிர் வெற்றிப் பயணம்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழிவகுத்த பாதையில், மகளிர் முன்னேற்றமே சமுதாயத்தை முன்னேற்ற அடிப்படை என்பதை உணர்ந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒவ்வொரு கட்டத்திலும் பெண்களுக்கு சொத்துரிமை, கல்வி உரிமை, தொழில் செய்யும் உரிமை போன்றவற்றை வழங்கி, தொழில் சார்ந்த விவரங்களை கற்பிப்பதுடன் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தி, அவர்களைச் சுதந்திரமானவர்களாகவும், பொருளாதார தற்சார்புடையவர்களாகவும் மாற்றி பாலினச் சமத்துவத்தை உறுதிப்படுத்தி, மகளிரின் வெற்றிப்பயணத்தை 'திராவிட மாடல்' அரசின் வழியாக தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்த அவசர செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., உரையாற்றினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## அ.தி.மு.க. - தே.மு.தி.க. - பா.ஜ.க. - அ.ம.மு.க. - நாம் தமிழர் கட்சிகளில் இருந்து

# ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் 5 ஆயிரம் பேர் கழகத்தில் இணைந்தனர்!

### அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில்!

*திண்டுக்கல், டிச. 3-*

ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தைச் சேர்ந்த அ.தி.மு.க., தே.மு.தி.க., பா.ஜ.க, அ.ம.மு.க., நாம் தமிழர் கட்சிகளைச் சேர்ந்த 5ஆயிரம் பேர் பா.ஜ.க. தொழில்பிரிவு மாவட்டச் செயலாளர் பி.பிரபாகரன் தலைமையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்தவர்களுக்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் அ.தி.மு.க., தே.மு.தி.க., நாம்தமிழர், பா.ஜ.க., அ.ம.மு.க. கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியைச் சந்தித்து கழகத்தில் தங்களை இணைத்து கொண்டனர்.

ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட சில்வார்பட்டி, அழகுபட்டி, கே.புதுக்கோட்டை, முருநெல்லிகோட்டை, ஜி.நடுப்பட்டி, டி.பண்ணைப்பட்டி, குருநாதநாயக்கனூர் உட்பட ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த அ.தி.மு.க., தே.மு.தி.க., நாம்தமிழர், பா.ஜ.க., அ.ம.மு.க. கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள், மற்றும் தொண்டர்கள் தி.மு.க.வில் இணையும் விழா திண்டுக்கல் தரகு மண்டி குமாஸ்தா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான ஐ.பி.செந்தில் குமார் தலைமை தாங்கினார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணைச்செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன் பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவரும், தெற்கு ஒன்றியச் செயலாளருமான ப.க.சிவகுருசாமி, வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, திண்டுக்கல் ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், மேற்கு ஒன்றியச் செயலாளர் பிள்ளையார்நத்தம் ராமன், திண்டுக்கல் மாநகரச் செயலாளரும், துணை மேயருமான ராஜப்பா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் பா.ஜ.க. தொழில் பிரிவு மாவட்டச் செயலாளர் பி.பிரபாகரன் தலைமையில் 5ஆயிரம் பேர் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக்கொண்டனர்.

தி.மு.க.வில் இணைந்த பி.பிரபாகரன் அ.ம.மு.க. ஒன்றிய மாணவரணி செயலாளர் பி.கருணாகரன், தே.மு.தி.க. ஒன்றிய விவசாய அணி செயலாளர் ரவிச்சந்திரன், அ.தி.மு.க. கிளைச்செயலாளர் பி.தியாகு, அ.ம.மு.க. ஒன்றிய துணைச்செயலாளர் பி.ஜெகவீரன், பா.ஜ.க. சுற்றுச்சூழல் பிரிவு மாவட்ட செயலாளர் ஏ.கணேசன், பா.ஜ.க. ஒன்றிய இளைஞர்அணி செயலாளர் பி.அருண்பாண்டி, பா.ஜ.க. ஓ.பி.சி. அணி ஒன்றிய செயலாளர் ஆர்.தினேஷ், பா.ஜ.க. கிளைச் செயலாளர்கள் வினோத், டி.சிவக்குமார் உட்பட மாற்றுக்கட்சியிலிருந்து கழகத்தில் இணைந்த அனைவருக்கும் சால்வை அணிவித்துவிட்டு பொது மக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி,

இன்று மாற்றுக்கட்சியிலிருந்து 5ஆயிரம் பேர் தங்களை, கழகத்தில் இணைத்துக்கொண்டனர். இதற்கு காரணம் தமிழகத்தில் மக்களுக்கான நல்லாட்சியை நடத்தி வரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்பாடுகளே என்றார்.

வருங்கால தமிழகம் இளைஞர்களின் எதிர்காலம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்பான செயல் திட்டங்களால் இன்று தமிழகம் முழுவதும் உள்ள இளைஞர்கள் விளையாட்டுத் துறையை நேசித்து வருவதோடு அதன் மூலம் அரசு பணி பெறும் வாய்ப்பையும் பெற்றுள்ளார்கள். குக்கிராமத்தில் உள்ள இளைஞர்கள்கூட தங்களை விளையாட்டுத் துறையில் ஈடுபட்டு சாதனை படைக்க தொடங்கிவிட்டார்கள். மழையா, புயலா எது வந்தாலும் அதை எதிர்கொள்ளும் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்று வருவதால் இன்று தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களும் நிம்மதியாக வாழும் நிலை உள்ளது. இப்போது இளைஞர்கள் 5ஆயிரம் பேர் கழகத்தில் இணைந்துள்ளார்கள். உங்களுக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது. இங்கு மாவட்டச் செயலாளராக இருக்கும் தம்பி செந்தில்குமார் அவர்கள் இளைஞர் அணி பொறுப்பு வகித்த பின்பு படிப்படியாக உயர்ந்து மாவட்டச் செயலாளராக பதவியில் உள்ளார். அவருக்கு இன்னும் பல வாய்ப்புகள் உள்ளது. இது போல உங்களுக்கும் பல வாய்ப்புகள் வரும். உங்கள் பணி மக்கள் பணியாக இருந்து மக்களுக்கு சேவை செய்தால் அதுவே உங்களை முன்னேற்றும் என்றதோடு தமிழக அரசு அறிவிக்கும் எந்த அரசு வேலை வாய்ப்பாக இருந்தாலும் திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரை குறிப்பாக ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள கிராமப்புற இளைஞர்களை முன்னேற்றும் வண்ணம் அவர்களுக்கு வழங்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ப.ராஜேஸ் பெருமாள், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், கன்னிவாடி பெருமாள், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண் ஜெகநாதன், அகரம் பேரூர்கழக செயலாளர் ஜெயபால், பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய துணைப்பெருந்தலைவர் ராஜேஸ்வரி தமிழ்ச்செல்வன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய துணைச்செயலாளர் பொன்மணி, ரெட்டியார் சத்திரம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் பொன்னிமாந்துரை அருளானந்தம், ஆடலூர் முத்துகிருஷ்ணன், ரெட்டியார்சத்திரம் ஏ.ஆர்.கே. ரமேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கன்னிமானூத்து எஸ்.பி.அண்ணாதுரை, கதிரயன்குளம் பாலன், கும்மம்பட்டி விவேகானந்தன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், முன்னாள் நிலவள வங்கி செயலாளர் சக்கரவர்த்தி மணி மாறன், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர்கள் ஹேமபிரியா மகேந்திரன், சில்வார்பட்டி பிச்சை, ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் ஜெயபால், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் தெத்துப்பட்டி முத்துப்பாண்டி, மற்றும் கழக நிர்வாகிகள், ரெட்டியார்சத்திரம் பகுதி பொது மக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கழகத்தின் கண்மணி என்றழைக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் மறைந்த கோ.சி.மணி அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணம் மாநகரக் கழக அலுவலகத்தில் அலங்கரிக்கப்பட்ட அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்டப் பொருளாளர் சாஸ்தா நடராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.அசோக்குமார், எல்.ராஜேந்திரன், மாநகரக் கழக நிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ.சசிதரன், ம.சிவானந்தம், டி.செந்தாமரை, எஸ்.இரவிசந்திரன், பகுதி செயலாளர்கள் இரா.செல்வராஜ், இரா.கல்யாணசுந்தரம், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, மு.கண்ணன் உள்ளிட்ட மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.

## சிறுபான்மையின மக்களை மேம்படுத்த கொண்டுவரப்பட்ட

# சமூக பொருளாதார திட்டத்தில் தொய்வு ஏன்?

### மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!

*புதுடெல்லி, டிச.4-*

"சிறுபான்மையின மக்களின் சமூகபொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட PMJVK (பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம்) திட்டம் ஏன் தொய்வுற்ற நிலையில் செயல்படுகிறது" நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக எம்.எம்.அப்துல்லா கேள்வி எழுப்பினார்.



"பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் (PMJVK) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் சிறுபான்மையினர் செறிந்து வாழும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் என்ன?, அதன் மூலம் எத்தனை பயனாளிகள் பயன் பெற்றனர்? என்றும், தமிழ்நாட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதில் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் என்ன?" என்றும் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரன் ரிஜ்ஜு "இது சிறுபான்மையினர் செறிந்து வாழும் பகுதிகளில் சமூக பொருளாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டமாகும். தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் PMJVK திட்டத்தின் மூலம் வகுப்பறைகள், நூலகங்கள், சமூக நலக் கூடங்கள், அங்கன்வாடி மையங்கள், திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்கள், மருத்துவ உதவித் திட்டங்கள் என மொத்தம் 123 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்காக செலவழிக்கப்பட்ட 658 கோடியே 44 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயில் ஒன்றிய அரசின் பங்கு 395 கோடியே 6 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இத்திட்டத்தை செயல்படுத்துவதில் ஏற்படுகிற தாமதமே முக்கிய சவாலாக உள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

## நீலகிரி மாவட்டத்தில் - மழையினால் வீடு இடிந்து

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.4 இலட்சம் நிதி!

### குடும்பத்தினருக்கு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆறுதல் கூறி வழங்கினார்!

*உதகை, டிச.4-*

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மழையினால் வீடு இடிந்து உயிரிழந்தவரின் உடலுக்கு நேரில் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி,மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.4 இலட்சத்திற்கான அனுமதி ஆணையினை, அன்னாரது தாயாரிடம் வழங்கி ஆறுதல் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம்,உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வீடு இடிந்து உயிரிழந்தவரின் உடலை நேற்று முன்தினம் (02.12.2024) நேரில் பார்வையிட்டு, மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.4 இலட்சத்திற்கான அனுமதியாணையினை,அன்னாரது தாயாரிடம் வழங்கி, ஆறுதல் தெரிவித்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வுகளில்,உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. என்.எஸ்.நிஷா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், முதுமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் அருண், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், முன்னாள் அரசு கொறடா முபாரக், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்,தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் திருமதி. ஷிபிலா மேரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சதீஸ், உதகை நகர மன்றத் தலைவர் திருமதி. வாணீஸ்வரி ,துணைத்தலைவர் ரவிக்குமார், உதவி இயக்குநர்கள் சரவணகுமார் (ஊராட்சிகள்), முகமது ரிஸ்வான் (பேரூராட்சிகள்), நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் குழந்தைராஜ், செயற்பொறியாளர் எழில்,வட்டாட்சியர்கள் சங்கர்கணேஷ் (உதகை), கனிசுந்தரம் (பேரிடர் மேலாண்மைத்துறை), மரு.ரவிசங்கர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.


# இதயநதி எங்கள் உதயநிதி!

உணவளித்துப் பசிதீர்த்த
உதியன் சேரனாய் வாழியவே!

உழைத்துக் கொண்டேயிருக்கும்
உதயசூரியனாய் வாழியவே!

பகைக்கஞ்சா நெஞ்சுடைய
பாண்டிய வேந்தனாய் வாழியவே!

பார் போற்றும் புகழ் வென்ற
பாரி வள்ளலாய் வாழியவே!

கல்லணையால் வியக்க வைத்த
கரிகாற் சோழனாய் வாழியவே!

கற்கண்டுத் தமிழ் தந்த
கம்ப நாடனாய் வாழியவே!

இடர் வரினும் எதற்குமஞ்சா
இளங்களிறாய் வாழியவே!

பாசக் களஞ்சியமாம்
பராந்தகச் சோழனாய் வாழியவே!

பகை வென்றுப் பாராண்ட
பராக்கிரமச் சோழனாய் வாழியவே!

வீரத்தில் திளைத்தோங்கிய
விஜயாலயச் சோழனாய் வாழியவே!

விவேகத்தில் தலைசிறந்த
விக்கிரமச் சோழனாய் வாழியவே!

உதயத்தை மட்டுமே
கண்ட உத்தமச் சோழனாய்
வாழியவே!

கடல் கடந்து களம் வென்ற
ராஜராஜ சோழனாய் வாழியவே!

இளைய தலைமுறை போற்றும்
எழுச்சி நாயகனே வாழியவே!

இதய நதியாய் தமிழனை
வாழவைக்கும்
உதயநிதியே வாழியவே!

இப்பொழுது நீயோ வந்தியத் தேவன்
நாளை நீயே இந்தியத் தேவன்!



**வி.பி. கலைராஜன்**
கழக இலக்கிய அணி செயலாளர்,
(தி.நகர் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்)